DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 12/2024** |
| Deposition of Witness for | : PW 11 |
| Name | : திரு.ராஜன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th **November 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகனஆய்வாளர் நிலை–1 ஆக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் மோட்டார் வாகன அலுவலகத்தில் மோட்டார் வாகன நிலை அலுவலகராக பணிபுரிந்த வெங்கடகிருஷ்ணன் தற்போது பணிஓய்வு பெற்று எங்கு குடியிருக்கிறார் என்று தெரியவில்லை. நீதிமன்றத்தில் அழைப்பாணை கிடைக்கப்பபெற்றதன்பேரில் வெங்கடகிருஷ்ணன் பதிவு செய்துவைத்திருந்த ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.09.2012ம் தேதி குருவிகுளம் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று அன்று மாலை 3.10 மணியளவில் அலுவலகத்தில் வைத்து KL 01 P 4887 ீன்ற பதிவு எண் கொண்ட கனரக வாகனத்தை ஆய்வு செய்துள்ளார். அந்த ஆய்வின் போது எ்வ்வித சேதாரமும் வாகனத்தில் காணப்படவில்லை. வாகனத்தின்

கால்தடைத்திறன் 60 விழுக்காடு இருந்தது. விபத்தானது வாகனத்தின் எந்தவித இயந்திரக்கோளாறாலும் ஏற்படவில்லை என்று கருத்து தெரிவித்துசான்று வழங்கியுள்ளார். **KL 01 P 4887 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 01.10.2012ம் தேதி சங்கரன்கோவில் தாலுகா காவல் உதவி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று அன்று மாலை 3.10 மணியளவில் அலுவலகத்தில் வைத்து TN 76 W 3033 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splender இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்துள்ளார். அந்த ஆய்வின் போது வாகனத்தின் முன்புறம் வலதுபுற சமிக்ஞை விளக்கு உடைந்து காணப்பட்டது. வலதுபக்க வைசர், வலதுபக்க பம்பர் ஆகியவற்றில் கீறல் காணப்பட்டது. வலது பின்புற புட்ரெஸ்ட் வளைந்து காணப்பட்டது. வாகனத்தின் கால்தடைத்திறன் 64 விழுக்காடு இருந்தது. விபத்தானது வாகனத்தின் எந்தவித இயந்திரக்கோளாறாலும் ஏற்படவில்லை என்று கருத்து தெரிவித்துசான்று வழங்கியுள்ளார். **TN 76 W 3033 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splender இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.ஆ.6 ஆவணத்தில் KL 01 P 4887 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் கீறல் இருந்ததாக துலங்குமா என்றால் இல்லை. விபத்து நடந்த நாளான 26.09.2012 தேதியிலிருந்து 2 நாட்கள் காலதாமதமாக 28.09.2012 அன்று மேற்படி வாகனம் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு அனுப்பப்பட்டது என அ.சா.ஆ.6 ஆவணத்தில் துலங்கும் என்றால் சரிதான். அ.சா.ஆ.6 ஆவணத்தில் மேற்படி காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.ஆ.7 ஆவணத்தில் TN 76 W 3033 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splender இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்ய வேண்டி

குருவிகுளம் காவல்நிலையத்திலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டதாக துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேதங்கள் ஒரு இருசக்கரவாகனம் பாலத்திலிருந்து கீழே விழுந்தால் அந்த வாகனத்திற்கு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. அ.சா.ஆ 7 ஆவணத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கரவாகனம் காலதாமதமாக மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான்முதல் விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்கள் ஆய்வு செய்யப்படவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**